புரட்சிப்
# பெரியார் முழக்கம்
திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு
www.dvkperiyar.com
ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் திருவள்ளுவர் ஆண்டு 2052 ஜனவரி 28, 2021 புரட்சி 20 முழக்கம் 3 விலை: ரூ.3.00

## ‘வேலு’ம் ‘முருகனு’ம் ஓட்டுக்குத் துணை!

‘முருகன்’ தேர்தல் களத்துக்கு வந்து விட்டான்; ‘முருகன் வேல்’ இப்போது அரசியல் மேடைகளில் வலம் வந்து கொண்டிருக்கிறது; திருத்தணியில் தி.மு.க. தலைவர் ஸ்டாலின் பேசிய மக்கள் கிராம சபையிலும் அவரது கட்சிக் காரர்கள் அவரிடம் ‘வேலை’ கொடுத்து விட்டார்கள். எல்லாம் ஓட்டு அரசியல் தான்; தி.மு.க.வையும் விட்டு வைக்கவில்லை.

ஸ்டாலின் ‘வேல்’ ஆயுதத்தை எடுத்த பிறகு பழனிச்சாமி அலறுகிறார்; பா.ஜ.க. முருகன் துடிக்கிறார்.

“ஸ்டாலின் வேல் தூக்கியிருப்பது பா.ஜ.க. வேல் யாத்திரைக்குக் கிடைத்த வெற்றி” என்கிறார் முருகன். முருகக் கடவுளின் வேல் பா.ஜ.க.வுக்கு மட்டுமே ‘பேட்டன்ட்ரைட்’ மற்ற கட்சிகள் பயன்படுத்தினால் அது பா.ஜ.க. தயவால் கிடைத்தது, என்கிறார். முருகக் கடவுள் ‘மிஸ்டு கால்’ வழியாக பா.ஜ.க. உறுப்பினராகி விட்டார் போலிருக்கிறது.

“யாரெல்லாம் கடவுளை இழிவாகப் பேசினார்களோ, அவர்கள் கையிலேயே முருகன் வேல் ஆயுதத்தைக் கொடுத்து காட்சி அளிக்க வைத்திருக்கிறார்” என்கிறார் முதல்வர் பழனிச்சாமி முருகப் பெருமான் சக்தியைப் பக்திப் பரவசத்தோடு பேசியிருக்கிறார். பேச்சு அத்துடன் நிற்க வில்லை. உண்மையிலேய முருகப் பெருமான் ஸ்டாலினிடம் ‘வேல்’ கொடுத்துவிட்டதாக வாக்காளர்கள் நம்பிவிடக் கூடாது அல்லவா?

அடுத்த வரியில், “உங்களுக்கு முருகன் ‘வேல்’ மட்டும் தான் தந்திருக்கிறான்; ஆனால் அ.இ.அ.தி.மு.க.வுக்கு முருகன் வரம் தந்து விட்டான்; வேல் தந்தால் எதிர்க்கட்சி வரிசைக்குப் போகலாம்; அதைத் தான் முருகன் ஸ்டாலினுக்கு உணர்த்தியிருக்கிறார்; எங்கள் கட்சி தான் தெய்வ குணாம்சம் கொண்டது” என்று பிரசங்கமே நடத்தி முடித்துள்ளார். நெற்றியில் விபூதி; குங்குமம்; கரங்களில் வண்ணக் கயிறுகள்; அதுபோதும் பக்திக்கு. மற்றபடி ஊழல்கள் செய்வதற்கும் முறைகேடுகளுக்கும் ‘பக்தி’க்கும் எந்தத் தொடர்பும் இல்லை..

முருகப் பெருமான், யார் ஆளும் கட்சி – யார் எதிர்க் கட்சி என்று முடிவு செய்து விட்ட பிறகு ஊர் ஊராகப் போய் எடப்பாடியில் எழுந்தருளியுள்ள இந்த பழனிச்சாமி ஏன் முழங்கிக் கொண் டிருக்கிறார்? ஆயிரம் கோடி ரூபாய் அரசுப் பணத்தை வாரி இறைத்து பத்திரிகைகளிலும் தொலைக் காட்சிகளிலும் விளம்பரங்களை செய்து கொண்டிருக் கிறார்? எதற்காக பா.ஜ.க.வின் மிரட்டலுக்கு பணிந்து குனிந்து பவ்யம் காட்டுகிறார்? பக்தி எல்லாம் வெறும் பேச்சுக்கு தானா? இப்படிக் கேட்டால் கடவுள் விரோதி என்று கூறி விடுவார்கள்.

‘வேல்’ ஆயுதத்தோடு இந்தப் பிரச்சாரங்கள் நிற்கப் போகிறதா? அல்லது அடுத்தக்கட்டமாக ‘வேல்’ ஆயுதத்தி லிருந்து ‘மொட்டை’ போடும் பிரார்த்தனைக்கு நகரப் போகிறதா என்பது நமக்குத் தெரியாது.

அரசியல் மேடைகளில் ‘வேல்’ தூக்கி நிற்கும் தலைவர்கள் அடுத்து ‘மொட்டை’த் தலையோடு வந்து நின்றால், எப்படி இருக்கும் என்று ‘கற்பனை’ செய்து பார்த்தாலே புல்லரிக்குது. போகிற போக்கில் ‘கடவுள் களை’யும் கூட்டணியில் சேர்த்து விடுவார்கள் போலிருக் கிறது. ‘சிவன்’ எந்தக் கூட்டணியில் சேரப் போகிறார்? ‘விஷ்ணு’வுடன் இரகசிய பேச்சு வார்த்தை நடந்து கொண்டிருக்கிறது. முருகன் தனக்கு 10 இடங்களும் 5 கோடி பணமும் கேட்கிறார். ஸ்ரீரங்கத்தில் படுத்திருக்கும் பெருமாள், பிராமண சங்கத்துக்கு ஆதரவு தெரிவித்து விட்டார். ‘கிருஷ்ணனை’ கூட்டணிக்கு இழுத்து வந்து விட்டால், பெண்கள் ஓட்டு அதிகரிக்க வாய்ப்புகள் அதிகம் என்று வாக்காளர்களிடையே நடத்திய கணக்கெடுப்பு கூறுகிறது. விநாயகன் தனிச் சின்னத்தில்தான் போட்டியிடுவேன் என்று அடம் பிடிக்கிறார் என்றெல்லாம் செய்திகள் வந்தாலும் ஆச்சரியமில்லை.

நடிகர் வடிவேலு காமெடி தான் நினைவுக்கு வருகிறது. கோயிலுக்குள் முருகன் ‘வேலை’ திருடிக் கொண்டு வெளியே வரும்போது பக்தர்கள் கூட்டம் திரண்டு விடும். அதிர்ச்சி அடைந்த வடிவேலு, தன்னையே ‘கடவுள் முருகன்’ என்று கூறி “கோவில் அருகினில் கூடிய கூட்டம் கடலா? கடல் அலையா?” என்று உச்சக் கட்டையில் பாடத் தொடங்கி விடுவார். மக்கள் கூட்டமும் அதை நம்பி விடும்; தப்பி விடுவார். ‘முருக பக்தர்கள்’ எத்தகைய தலைசிறந்த அறிவாளிகள் என்பதை அற்புதமாக விளக்கும் காட்சி அது.

வடிவேலு, ‘வடிவேலன்’ வேலை அபகரித்த கதை அப்படி. கட்சிகள் ‘வேல் தூக்கி’ நிற்கும் கதை இப்படி.

உண்மையில் முருகன் என்று ஒருவன் கடவுளாக இருந்திருப்பானால், இந்த அரசியல் விளையாட் டுகளைத் துணிந்து இவர்கள் நடத்தியிருப்பார்களா?

**– கோடங்குடி மாரிமுத்து**

### அமெரிக்க அதிபர் ஆலோசனைக் குழுவிலிருந்து
# ‘ஆர்.எஸ்.எஸ். ஆதரவாளர்கள் நீக்கம்

மோடியும் டிரம்பும் மிகவும் நெருக்கமாகவே இருந்தார்கள். மோடியின் ‘இந்துத்துவா’ கொள்கையை தான் நேசிப்பதாக டிரம்ப் கூறினார். மோடி அமெரிக்கா போனார். அங்கே இந்தியாவிலிருந்து குடியேறி அமெரிக்க குடியுரிமை பெற்ற பார்ப்பன ‘தேச பக்தர்கள்’, ‘இந்துத்துவாவாதிகள்’ - டிரம்பின் தீவிர ஆதரவாளர்களாக செயல்பட்டார்கள். இரண்டாம் முறையாக டிரம்ப் தான் அமெரிக்க அதிபர் என்று ஆதரவு திரட்டினார் மோடி.

கடந்த 2020ஆம் ஆண்டு பிப்ரவரியில் உலகம் முழுதும் ‘கொரானா’ எச்சரிக்கைகள் தடுப்பு நடவடிக்கைகள் தொடங்கி நடந்து கொண் டிருந்த காலத்தில் மோடி, டிரம்பை குஜராத்துக்கு அழைத்தார். ஒரு இலட்சம் மக்களைத் திரட்டி, ‘நமஸ்தே டிரம்ப்’ என்ற வரவேற்பு விழாவை நடத்தினார். அதனால்தான் டிரம்ப் பதவி விலகு வதற்கு சில நாட்களுக்கு முன்பாக மோடிக்கு உயரிய விருதை வழங்கி மகிழ்ந்தார். இந்த விருது, அமெரிக்காவில் சாதனைப் படைத்த இராணு வத்தினருக்கு அதிபர் வழங்குவது வழக்கமாம்.

இங்கே பார்ப்பன உயர்ஜாதியை மோடி எப்படி ஆதரித்து நிற்கிறாரோ அதுபோல டிரம்ப் வெள்ளை நிறவெறியர்களின் காவலராக இருந்தார் டிரம்ப். 50 இலட்சம் வாக்குகள் வித்தியாசத்தில் குடியரசு கட்சி வேட்பாளர் டிரம்ப், ஜனநாயகக் கட்சி வேட்பாளர் ஜோ பைடனிடம் தோற்றார். ஜனநாயகத்தில் மக்கள் தந்த முடிவை டிரம்ப் ஏற்க மறுத்து அடம் பிடித்தார். வெற்றியை உறுதி செய்யும் அமெரிக்க நாடாளுமன்றக் கட்டிடத்தின் முன்பாக டிரம்ப் ஆதரவாளர்கள் திரண்டு நாடாளுமன்றத்தைத் தாக்கினார்கள். நீதிமன்றங்களில் வழக்குகள் தொடரப்பட்டன.

நீதிமன்றங்கள் டிரம்ப் மிரட்டலுக்கு பணிய வில்லை. அமெரிக்காவில் காலங் காலமாகப் பின்பற்றும் நாகரிகமான சம்பிரதாயம், பதவியிலிருந்த அதிபர் புதியதாக பதவி ஏற்கும் அதிபர் விழாவில் பங்கேற்பது என்பதாகும். அந்த சம்பிரதாயத்தையும் மதிக்காமல் விழாவைப் புறக்கணித்தார் டிரம்ப்.

டிரம்ப்பின் தோல்வியால் இந்தியாவில் பார்ப்பன மேட்டுக் குடிகள் துவண்டு போனார்கள். தங்களின் தோல்வியாகவே கருதினார்கள். டிரம்ப் வெற்றி பெற்றிருந்தால் அது மோடிக்கு சூட்டிய மகுடமாக வெற்றிக் களியாட்டம் போட்டிருப்பார்கள்.

இப்போது பைடன் பதவிக்கு வந்தவுடன் என்ன நடந்திருக்கிறது? கருப்பர்கள் உரிமைகளை மதிப்போம் என்கிறார். மார்ட்டின் லூதரை தனது பதவி ஏற்பு விழாவில் நினைவு கூர்ந்தார். இந்திய வம்சாவளியில் வந்த கருப்பர் இன அடையாளமான கமலா ஹாரீஸ் இப்போது அந்நாட்டின் துணை ஜனாதிபதி.

இது தவிர மற்றொரு மாற்றமும் நிகழ்ந் துள்ளது. பைடன் ஆலோசனைக் குழுவிலிருந்து ஆர்.எஸ்.எஸ்., பா.ஜ.க. ஆதரவாளர்கள் நீக்கப்பட் டுள்ளார்கள். ஒபாமா அதிபராக இருந்தபோது அவரது முக்கிய ஆலோசகர்களாக இருந்த சோனல் ஷா மற்றும் அமீத் ஜானி இருவரும் பைடன் தேர்தல் பரப்புரைக் குழுவில் இடம் பெற்றிருந்தனர். இவர்கள் ஆர்.எஸ்.எஸ். பார்ப்பனியர்கள்.

குடியுரிமை திருத்தச் சட்டம், காஷ்மீர் உரிமை பறிப்பு போன்ற மோடி ஆட்சியின் செயல்பாடுகளை எதிர்த்துப் போராடிய 19 இந்தியர்களின் அமைப்புகள் இந்த ஆர்.எஸ்.எஸ். பேர் வழிகள், பைடன் ஆலோசனைக் குழுவில் இடம் பெறக் கூடாது என்று எதிர்ப்பு தெரிவித்ததால் இவர்கள் நீக்கப் பட்டுள்ளனர். ‘திடிரிப்யூன்’ அமெரிக்க நாளேடு (ஜன. 21, 2021) இந்த செய்தியை விரிவாக வெளியிட்டுள்ளது.

# தமிழ்நாட்டு தாளவாடியில் கன்னடர் வெறியாட்டத்தைக் கண்டித்து ஈரோட்டில் ஆர்ப்பாட்டம்




கன்னட வெறியன் வாட்டாள் நாகராஜ் மற்றும் அவன் நடத்தும் கன்னட சலுவாலியா அமைப்பைச் சேர்ந்த வர்கள் தமிழ்நாட்டிற் குள் நுழைந்து தாளவாடி கன்னடர்களுக்கே சொந்தம் என்று முழக்க மிட்டுக் கொண்டே, ஈரோடு மாவட்டம் தாளவாடி அருகே கடந்த 10.01.2021 அன்று தமிழில் எழுதப்பட்ட தமிழக அரசின் நெடுஞ்சாலை தகவல் பெயர்ப் பலகைகளை அடித்து உடைத்தெறிந்து தமிழ் எழுத்துக்களைக் காலில் போட்டு மிதித்து வெறியாட்டம் நடத்தியுள்ளனர்.

இது தமிழ்நாட்டு அரசு சொத்துக்களைச் சேதப்படுத்தியதும், தமிழர் கன்னடரிடையே வன்முறை மோதலைத் தூண்டி சமூக அமைதியை சீர்குலைக்கும் வெறிச் செயல் ஆகும்.

அத்தோடு நின்றுவிடாமல் மீண்டும் இரண்டாவது முறையாக தாளவாடி அருகே பைனாபுரம் எனும் இடத்தில் வாட்டாள் நாகராஜ் கும்பல் நுழைந்து தமிழக அரசின் அறிவிப்புப் பலகைகளை அடித்து நொறுக்கி வெறியாட்டம் போட்டுள்ளது. தாளவாடி கன்னடர்க்கே சொந்தம் என்று அங்கும் கூச்சலிட்டுள்ளது.

ஏற்கனவே ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர்த் திட்டம் தொடங்கப்பட்டபோது இன்றைய கர்நாடக முதல்வரும் அன்றைய எதிர்க்கட்சித் தலைவருமான எடியூரப்பா ஒகேனக்கல்லுக்கே பெருங்கூட்டத் துடன் வந்து “ஒகேனக்கல் கர்நாடகாவுக்கே சொந்தம்; தமிழர்கள் அனைவரும் வெளியேற வேண்டும்” என்று ஆர்ப்பாட்டம் நடத்தியவர்தான். எனவே இதிலும் எடியூரப்பாவின் பங்கு உண்டா என்பதையும் யோசிக்க வேண்டியுள்ளது.

கன்னட வெறியர்களின் இந்த வெறிச்செயல் தமிழக மக்களிடையே பெரும் கொந்தளிப்பை உருவாக்கியுள்ளது. நிலைமை விபரீதமாகிக் கட்டுக்கடங்காமல் போவதற்குள் தமிழக அரசு தக்க நடவடிக்கை எடுக்க முன்வர வேண்டும். வழக்கு பதிவது மட்டும் போதாது. அரசு சொத்துக்களை நாசமாக்கி, தமிழ்நாட்டரசின் தன்மானத்தையும் கேள்விக்குள்ளாக்கும் இன வெறியர்களை கைது செய்து தண்டிக்கவேண்டும் என்பதே அனைவரின் எதிர்பார்ப்பும் ஆகும்.

இதனையொட்டி ஈரோடு கருங்கல்பாளையம் காந்தி சிலை அருகில் பெரியாரிய உணர்வாளர்கள் கூட்டமைப்பின் சார்பாக கண்டன ஆர்ப்பாட்டம் 20.01.2021 அன்று காலை நடைபெற்றது.

(4ஆம் பக்கம்)

தலையங்கம்

## மக்கள் உரிமைகளை மதிக்காத இந்தியக் குடியரசு

ஜன. 26, குடியரசு நாளில் டெல்லியில் இரண்டு பேரணிகள் நடப்பது வரலாற்றில் இதுவே முதன்முறையாக இருக்கும். முப்படை அணி வகுப்போடு நடக்கும் அரசு பேரணியோடு அரசுக்கு எதிரான விவசாயிகளின் டிராக்டர் பேரணியும் நடக்கப் போகிறது. டெல்லி நகரத்துக்குள் 100 கிலோ மீட்டர் தூரம் நுழைவதற்கும் பேரணி நடத்துவதற்கும் விவசாயிகளுக்கு காவல்துறை அனுமதி வழங்கியிருக்கிறது. உலக நாடுகள் இதை வியப்பாகவே பார்க்கும்! இப்படி குடியரசு நாளில் அரசுக்கு எதிராக விவசாயிகள் அணி வகுப்பும் நடப்பதைப் பார்த்து இந்தியாவில் நடக்கும் ஆட்சி எத்தகைய நிலையில் இருக்கிறது என்பதை மதிப்பீடு செய்யப் போகின்றனர். பெரும்பான்மை எண்ணிக்கையை சர்வாதிகாரப் பாதைக்குப் பயன்படுத்தும் மக்கள் விரோத செயல்பாடுகளை உலக நாடுகள் எள்ளி நகையாடும் என்பது பற்றி இந்த ஆட்சிக்கு எந்தக் கவலையும் இல்லை. மதவெறிக் கொள்கைகளை கண்மூடித்தனமாக ஏற்றுக் கொண்ட ஆட்சிகளின் பண்பு இப்படித் தான் இருக்கும்!

விவசாயிகளின் போராட்டம் 60 நாட்களுக்கு மேலாக தொடர்ந்து கொண்டிருக்கிறது. இந்திய வரலாற்றில் இதற்கு முன் இப்படி ஒரு போராட்டம் நடந்ததாகத் தெரியவில்லை. போராட்டக் களத்தில் வன்முறை தலைதூக்கி விடக் கூடாது என்பதில் போராடும் விவசாயிகள் மேற்கொண்ட முன்னெச்சரிக்கையும் கவனமும் தான் இதற்கு அடிப்படையான காரணம். அமைதி வழியில் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்படும் போராட்ட வடிவங்கள் மிகவும் வலிமையானவை. தமிழ்நாட்டில் பெரியார் அத்தகைய போராட்டங்களைத்தான் நடத்திக் காட்டினார். தன்னல மறுப்போடு அடக்குமுறைகளை ஏற்றுக் கொண்டு எதிர் வழக்காடுதல் இல்லாத அமைதி வழியே பெரியாரின் போராட்ட முறையாக இருந்தது. ‘பிராமணாள்’ பெயர் அழிப்புக் கிளர்ச்சியை சென்னையில் ‘முரளி கபே’ ஓட்டல் முன் பெரியார் இயக்கம் ஓராண்டு தொடர்ந்து நடத்தியது. தோழர்கள் கைதானார்கள். இது ஒரு உதாரணம்.

அதே அணுகுமுறைதான் இப்போது விவசாயிகளின் போராட்டத்திலும் காண முடிகிறது. அதன் காரணமாகத்தான் ‘குடியரசு’ நாளிலேயே விவசாயிகளின் பேரணியையும் அனுமதிக்கும் நிலைக்கு நடுவண் அரசு தள்ளப்பட்டிருக்கிறது. உச்சநீதிமன்றம் தலையிட மறுத்து விட்டது; ‘குடியரசு’ நாளில் நாட்டின் பொருளாதார சீர்கேட்டையும் நாம் பரிசீலிக்க வேண்டியிருக்கிறது.

நாட்டின் பொருளாதார நிலை படுமோசமாகி வரும் சூழலில் பா.ஜ.க. ஆட்சி பன்னாட்டு நிறுவனங்களை வளர்த்து விடுவதற்கும் அரசுத் துறைகளை தனியார் மயமாக்குவதற்கும் தொழிலாளர்கள் பாதுகாப்பு சட்டங்களையும் வேளாண் பாதுகாப்பையும் சீர்குலைப் பதற்குமே திட்டங்களைத் தீட்டி வருவதோடு மதச் சார்பின்மை கொள்கையைக் குழி தோண்டி புதைக்கும் முயற்சிகளில் தீவிரம் காட்டி வருகிறது.

2020ஆம் ஆண்டின் உலக பசி பட்டினி அட்டவணையில் உலகிலுள்ள 107 நாடுகளின் மத்தியில் இந்தியா 94ஆவது இடத்துக்கு சரிந்திருக்கிறது. இந்திய பொருளாதாரத்தைக் கண்காணிக்கும் மய்யம் (CMIE) 2019 டிசம்பரில் அளித்திருந்த அறிக்கையுடன் ஒப்பிடுகையில் 2020 டிசம்பரில் நாட்டில் 1 கோடியே 70 இலட்சம் பேர் வேலையிலிருந்து வெளியேற்றப்பட்டிருக்கிறார்கள். இதன் மூலம் வேலையின்மை சதவீதம் 9.1 சதவீதம் அதிகரித்துள்ளது. 2020இல் இந்தியாவில் பணக்காரர்கள் அதாவது பல கோடிக்கு உரிமையுள்ள பில்லியனர்கள் எண்ணிக்கை பல மடங்கு உயர்ந்து 90 என்ற உச்சத்தை எட்டியிருக்கிறது. கொரானாவால் சமூகமே முடங்கியபோது, 4234 கம்பெனிகளின் நிதிநிலை அறிக்கைகளை ஆராயும்போது, அவைகளின் நிகர இலாபம் 569 சதவீதம் அதிகரித்திருக்கிறது. அதேபோல், இந்த கம்பெனிகள் செப்டம்பர் காலாண்டில் தொழிலாளர்களுக்கு அளித்து வந்த ஊதியத்தை பாதியாகக் குறைத்துள்ளன. நாடாளுமன்ற கட்டிடம், பிரதமருக்கு தனி விமானம் என்று பல்லாயிரம் கோடி ரூபாய் வீணடிக்கப் படுகிறது. இராணுவத்துக்கு ரூ.3.37 இலட்சம் கோடி செலவிடும் இந்தியா, அதில் கால் பங்கைக்கூட மருத்துவத்துக்கு செலவிடுவதில்லை. நடப்பு நிதியாண்டில் நிதிநிலை அறிக்கையில் சுகாதாரத்துக்கு ஒதுக்கப்பட் டிருப்பது ரூ.69,000 கோடி (மொத்த ஜி.டி.பி. எனும் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் ஒரு சதவீதம்கூட இல்லை. 0.3 சதவீதம் மட்டுமே). 10,000 பேருக்கு 6 மருத்துவர்கள் என்ற அடிப்படையிலேயே மருத்துவர் விகிதாச்சாரம் உள்ளது. ஒரு இலட்சம் பேருக்கு ஓர் அரசு மருத்துவமனை என்ற வீதத்திலும், 2046 பேருக்கு ஒரு படுக்கை என்ற வீதத்திலுமே மருத்துவ வசதி உள்ளது. தமிழ்நாடு மட்டும் ஓரளவு முன்னணியில் உள்ளது. இது குறித்து விரிவான கட்டுரை ஒன்றை ‘இந்து’ ஏட்டின் வணிகப் பகுதியில் முகம்மது ரியாஸ் என்பவர் எழுதியிருக்கிறார். கட்டுரையின் இறுதிப் பகுதியில் ஒரு முக்கிய கருத்தை சுட்டிக் காட்டியிருக்கிறார்:

“இந்தியா என்ற நாடு சமத்துவமின்மையால் கட்டமைக்கப்பட்டிருக்கிறது. சாதி, மதம், இனம், மொழி, பாலினப் பாகுபாடு என்ற சமூக ரீதியான ஏற்றத் தாழ்வுகள் சரி செய்யப்படாமல் எந்த வளர்ச்சியும் இங்கு சாத்தியமில்லை. அந்த வகையில் இந்தியா பொருளாதாரக் கட்டமைப்பை மட்டுமல்ல, **சமூகக் கட்டமைப்பையும் மாற்ற வேண்டிய தருணத்தில் இருக்கிறது**” என்று முடிக்கிறார்.

இந்த நிலையில்தான் குடியரசு தின கொண்டாட்ட இராணுவ அணி வகுப்பும் அதே நாளில் அரசுக்கு எதிரான விவசாயிகளின் டிராக்டர் அணி வகுப்பும் நடக்கிறது.

# புனைவுகளை அறிவியலாக்கும் நாட்காட்டி

*கோரக்பூர் அய்.அய்.டி. வெளியிட்டுள்ள நாட்காட்டி – போலி அறிவியலை அறிவியலோடு இணைத்து குழப்ப முயற்சிப்பதை படம் பிடிக்கிறது இக்கட்டுரை.*

ஒரு பிரபல தமிழ் நாளிதழில் இந்திய அறிவுமுறை குறித்த நாட்காட்டி பற்றிப் பாராட்டி ஒரு கட்டுரை வந்திருந்தது. ஐஐடி காரக்பூரில் இயங்கும் நேரு அறிவியல் தொழில்நுட்ப அருங்காட்சியகம் சார்பாக வெளியிடப்பட்டதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. ஒவ்வொரு மாதத்திற்கும் பண்டைய அறிவு குறித்தும் அதனைப் பாராட்டும் விதமாக மேலைநாட்டு விஞ்ஞானிகளின் பாராட்டுக் கருத்துகளும் குறிப்பிடப்பட்டுள்ளது. இதில் முக்கியமாக சொல்ல முயற்சிப்பது, சமஸ்கிருதப் பெருமையும் சமஸ்கிருதம் சார் அறிவு முறையும் இந்தியாவின் உன்னத வரலாறாகக் கூறப்படுகிறது. இவை அனைத்தும் ஆதாரமற்ற புனைவு வகை அறிவு என்பதே முதல் கட்டப் பார்வையாகும்.

**‘சப்த ரிஷிகள்’ :** ஜனவரி மாதத்தை காஸ்யபர், ஜமதக்னி, கௌதமா, பரத்வாஜா, விசுவாமித்திரர், வஷிஷ்டர், அட்ரி உள்ளிட்ட ஏழு ரிஷிகளை சப்த ரிஷிகள் எனக் குறிப்பிடுகிறது. டிசம்பர் மாதத்தை கண் முன்னே வாழ்ந்த பி.சி.ராய், ஜே.சி. போஸ், சீனிவாச ராமானுஜன், எஸ்.என். போஸ், சமீமா சாட்டர்ஜி, ஜானகி அம்மாள், ஐராவதி கார்வே போன்ற தலைசிறந்த விஞ்ஞானிகளுக்கு ‘ஆச்சார்யா’ பட்டத்துடன் முடிக்கின்றனர். இதன் மூலம் நமது தலைமுறைகளில் கண் முன்னே சாதனை செய்த விஞ்ஞானிகளுக்கு ஆச்சார்யா பட்டம் கொடுத்து வேதங்கள், இதிகாசங்கள், புராணங்களில் கற்பனைப் பாத்திரங்களாக சித்தரிக்கப்பட்ட ரிஷிகளை சம கால விஞ்ஞானிகளோடு இணைத்து வரலாற்றுச் சான்றாக நிரூபிப்பது தான் இந்த காலண்டரின் முக்கிய வேலையாக இருக்கிறது. சமஸ்கிருதம் தான் ஐரோப்பிய மொழிகளுக்கு முதன்மை என்றும், கணிதம் அத்வைதத்தின் சூனியக் கோட்பாட்டில் இருந்து தொடங்கியது என்றும், அர்த்தசாஸ்திரம் இன்றைய பொருளியலின் முன்னோடி என்றும், ஆயுர் வேதத்தின் முன்னோடி தன்வந்திரி என்றும், கலிலியோ, கெப்ளருக்கு முன்னரே வேதத்தில் வானியல் குறிப்பிடப்பட்டுள்ளது என்றும், தற்போதைய புவி வெப்பமயமாதல் உள்ளிட்ட சுற்றுசூழல் பிரச்சினைகளைப் புரிந்து கொள்ள புராணங்களில் கூறப்படும் வனவாசம் என்ற கருத்துதான் முனனோடி என்றும், தற்போதைய கட்டிடக் கலைக்கு ஏழாவது மண்டல ரிக் வேதம் முன்னோடி என்றும், நியாயம், தர்மம், பணி நேர்மை, சமூகம், சூழல், சட்டம் ஆகியன குறித்து ரிக் வேதத்தின் பத்தாவது மண்டலம் பேசுகின்றது என்றும், நாட்டிய சாஸ்திரத்திற்கு அக்னி சாஸ்திரம், வேதாங்கம், அகஸ்திய ரிஷி ஆகியோரே துவக்கம் என்றும் ஒவ்வொன்றாக சிலாகித்து உள்ளனர்.

இதில் கொடுமை என்னவென்றால் பண்டைய இந்தியாவென தற்போது கருதப்படும் நிலப்பரப்பில் வரலாற்று ரீதியாக வாழ்ந்த ஆர்யப்பட்டா, பிரம்மகுப்தா, பாஸ்கரா, வராக மிகிரர், சுஸ்ருதா, சரகா, ஆத்ரேயா போன்றோர்களும் பின்னுக்குத் தள்ளப்படுகின்றன. அதே நேரத்தில் கற்பனைப் பாத்திரங்களான ரிஷிகளே முன்னோடி என்று கூறப்படுகிறது. வேதங்கள், காவியங்கள் ஆகியவை அறிவியல் ஆராய்ச்சி நூல்களாக முன் வைக்கப்படுகின்றன. ரிஷிகள் அனைவருமே கற்பனைக் கதாபாத்திரங்களே! இவர்களுடன் நமது தற்கால தலைசிறந்த ஏழு விஞ்ஞானிகளை ஆச்சாரியர்களாக்கி ரிஷிகளுடன் இணைந்து அந்த ரிஷிகளுக்கு சரித்திரச் சான்று கொடுத்து நிரூபிக்கும் முயற்சி என்பதைத் தவிர வேறு ஏதும் இதில் இல்லை. குறிப்பாக சரகா, சுஸ்ருதர் போன்றோர் உயிரோடு வாழ்ந்து மருத்துவத் துறைக்கு சிறப்புச் சேர்த்தவர்கள். அவர்கள் கற்பனையான புனைவுகளான தன்வந்திரி என்ற ரிஷியைப் பின்பற்றியவர்கள் என கூறுவது தன்வந்திரிக்கே வரலாற்று அடையாளம் கொடுப்பதாகும். தன்வந்திரி உட்பட இந்த சப்த ரிஷிகளின் காலம் எதுவென்று இவர்களால் சொல்ல முடியுமா?

**இந்தியாவின் ஆரம்பகால அறிவு :** ‘இந்தியன் நாலட்ஜ் சிஸ்டம்’ (இந்திய அறிவுக் கட்டமைப்பு) என்று சொல்லும் போதே அது நவீன சோதனைக்கு உட்பட்ட அறிவியல் உருவாவதற்கு முன்னர் இருந்த ஆரம்ப கால பாரம்பரிய அறிவு என்றே கொள்ளலாம். அப்படி என்றால் இந்தியாவின் ஆரம்ப கால அறிவு, தொழில்நுட்பம் என்பது வேத காலத்திற்கு முற்பட்டது. ஆதாரங்களுடன் கூடியது என்றால் அது சிந்து சமவெளி நாகரீகத்தில் இருந்து அல்லவா தொடங்கப்பட்டிருக்க வேண்டும்? எழுத்து, தொழில்நுட்பம் உள்ளிட்ட ஆதாரங்கள் சமஸ்கிருத காலத்திற்கு முற்பட்டவை ஆகும். அது ஏன் இந்திய அறிவுசார் பாரம்பரியம் பேசும் இந்தக் காலண்டரில் இடம்பெறவில்லை?


இந்திய பாரம்பரிய அறிவு வரலாற்றில் சமஸ்கிருதத்திற்கு முன்னரே உருவான திராவிட மொழிகளில் தமிழ் போன்ற மிகத் தொன்மையான மொழியும் சிந்துவெளி நாகரீகத்தைப் போலவே வேதகாலத்திற்கு பிற்பட்ட கீழடி போன்ற ஆதாரப்பூர்வமான அறிவியல் தொழில்நுட்பம் குறித்தோ, தென்னிந்திய பாரம்பரிய சித்தர்களின் அறிவு வளர்ச்சியோ ஏன் கண்டு கொள்ளப்படவில்லை? கேரளாவில் மலர்ந்த கணிதவியல், வானவியல் குறித்து ஏதும் ஏன் இடம்பெறவில்லை? இந்தியாவில் முதன் முதலாக அறிவியலுக்கான நோபல்பரிசு பெற்ற சி.வி.ராமன் இடம் பெறவில்லையே, ஏன்? விடுதலைக்குப்பின் இந்தியாவின் அறிவியல் முன்னேற்றமான அணு அறிவியல், விண்வெளி அறிவியல் குறித்த எதுவுமே இல்லையே? அதை மறைப்பதன் நோக்கம் என்ன? ஏனென்றால் இதன் நோக்கமே வேதங்கள், இதிகாசங்கள், புராணங்கள் ஆகியவற்றில் கற்பனையாக கூறியவற்றை சம கால அறிவியலோடு பொருத்திப் பேசி பெருமை கொள்வதும் அதை வரலாற்றாக்குவதும் தான்.

**உண்மை அறிவியலை மக்களிடம் கொண்டு செல்வோம்! :** மேலும் புனைவு அறிவியலை நியாப்படுத்தும் விதமாக ஐரோப்பிய, அமெரிக்க, இந்தியாவின் பிரபல விஞ்ஞானிகளின் படங்களைப் அந்தந்த மாதத்தில் போட்டு ஒவ்வொரு புனைவுகளையும் பாராட்டுவது போல குறிப்புகள்கொடுத்துள்ளனர். வில் துராந்த், ஐன்ஸ்டீன், மார்க் ட்வைன், ரோலண்ட், அர்னால்ட் டாயின் பீ, மேக்ஸ் முல்லர், அலீஸ் போனர் ஆகிய விஞ்ஞானிகளை முன் நிறுத்தி புனைவு அறிவு முறைக்கு அங்கீகாரம் கொடுக்க முனைகின்றனர். இதில் வேடிக்கை என்னவென்றால் ஐன்ஸ்டீன், நியூட்டன் போன்றோர்களின் கொள்கைகள் தப்பும் தவறுமானது என்று இந்திய விஞ்ஞானிகள் மாநாட்டில் பேசியஜாம்பவான்கள் தான் இவர்கள். மேலும் நவீன அறிவியல் வளர்ச்சி பற்றி நாம் பேசும் போதெல்லாம் இவற்றைமேலை நாட்டு ஐரோப்பிய அறிவியல் என்றும் நவீன அறிவியல் குறித்துப் பேசுபவர்களை மெக்காலே புத்திரர்கள் என்றும் ஏளனம் செய்வதும் இதே பாரம்பரியவாதிகள் தான்!

இவை ஒரு புறம் இருக்க, அறிவியல் வரலாற்றைத் திரித்து எழுதியும் போலி அறிவியல் வரலாற்றை உருவாக்கும் செயல்பாட்டை ஒரு நவீன அறிவியல் தொழில்நுட்ப மையம் செய்யலாமா? உண்மையில் முதன் முதலாக உருவாக்கப்பட்ட காரக்பூர் ஐஐடியின் பெருமைக்கும் அறிவியல் மனப்பான்மைக்காக தன்னை அர்ப்பணித்த நேருவின் பெயருக்கும் இந்தக் காலண்டர் பெருங்களங்கம் விளைவிக்கும் வகையில் உள்ளது. சுருக்கமாகக் கூறினால் தற்போதைய மத்திய அரசின் அரசியல் சார்ந்த போலி, புனைவு அறிவியலை பிரபலபடுத்துவதற்காகத் தயாரிக்கப்பட்ட காலண்டர் என்பது தான் உண்மை. இதற்கு மாற்றாக இந்தியாவின் அறிவியல் தொழில்நுட்ப வரலாற்றை உண்மையாகப் பிரதிபலிக்கும் காலண்டர் ஒன்றை அறிவியல் இயக்கங்கள் தயாரித்து வருகின்றன. இதன் மூலம் உண்மையான அறிவியல் மக்களிடம் எடுத்துச் சொல்லப்படும்.

**நன்றி: ‘தீக்கதிர்’ நாளேட்டில்**
**பேரா. பொ. இராஜமாணிக்கம் எழுதிய கட்டுரை**

### பழையதை மாற்றக்கூடாதா ?



பழையதை மாற்றக் கூடாது என்பதும், பழையவைகள் எல்லாம் தெய்வாம்சத்தால் ஏற்பட்டவை என்பதும் – பழைய செய்கைகளோ, பழைய தத்துவங்களோ, பழைய மாதிரிகளோ, பழைய உபதேசங்களோ முக் காலத்துக்கும், முடிவு காலம் வரைக்கும் இருப்பதற்கும், பின்பற்றுவதற்கும் தகுதியான தீர்க்கதரிசனத்துடன் தெய்வீகத் தன்மையில் ஏற்பட்டவை என்று சொல்லப்படுமானால் – அவைகளை மத வெறியர்களுக்கும், பழைமையில் பிழைக்கக் காத்து கொண்டிருக்கும் சோம்பேறிச் சுயநலக் கூட்டங்களுக்கும் விட்டு விட வேண்டுமே ஒழிய, அவற்றைப் பொதுஜன-சாதாரண நித்திய வாழ்க்கையில் கடைபிடிக்கிறவர்கள் யாராய் இருந்தாலும் அவர்கள் மிக மிகக் கஷ்டமும் தொல்லையும் அனுபவிக்க வேண்டிவரும் என்பதில் மறுப்புக்கு இடம் இருக்காது. **‘விடுதலை’ 03.03.1948**

# ஆங்கிலேயருக்கு சேவகம் செய்யத் தயார், என்றார் சாவர்க்கர் (2)

***‘ஆனந்த விகடன்’ வார ஏடு, 2019, டிசம்பர் 18 இதழில் சாவர்க்கர் பற்றிய கட்டுரை இது.***

*சாவர்க்கர் 1924-க்கு முன்பு மன்னிப்புக் கடிதம் எழுதினார் என்பதுதானே, நாம் அறிந்தது. ஆனால், சிறையில் அடைக்கப்பட்ட சில மாதங்களிலேயே, ஆங்கிலேயருக்கு மன்னிப்புக் கடிதம் எழுத ஆரம்பித்துவிட்டார் சாவர்க்கர். 1911-லேயே அவர் ஒரு கடிதம் எழுதினார். அது இப்போது கிடைப்பதில்லை. ஆனால், 1913 அவர் அனுப்பிய மற்றொரு கடிதத்தில் அந்த முந்தைய கடிதத்தைக் குறிப்பிடுகிறார். கடிதத்தில், ‘அடிபணிதல்’ வாசகங்கள் பளிச்சென்று இருக்கின்றன.*

‘To : The home member of the government of India’ *என்று தலைப்பிடப்பட்டிருக்கும் அந்தக் கடிதத்தில், ‘சிறைக் கொடுமைகளை என்னால் தாங்க முடியவில்லை. எண்ணெய் ஆலையில் போட்டு வதைக்கிறார்கள். அரசு கருணை காட்டி என்னை விடுவித்தால், நான் அரசியலமைப்பின் தீவிர ஆதரவாளனாகச் செயல்படுவேன் என உறுதி கூறுகிறேன். எந்தச் சூழ்நிலையிலும் அரசுக்கு சேவகம் செய்ய நான் தயாராக இருக்கிறேன். எங்களுக்கு அன்னையாக இருக்கும் அரசே கருணை காட்டவில்லையென்றால், இந்த மகன் வேறு எங்கே சென்று நிற்பேன்...’ என்று சொல்கிறார் சாவர்க்கர்.*

*சாவர்க்கரைப் போலவே, பகத்சிங்கும் ஒரு கடிதத்தை பிரிட்டிஷ் அரசாங்கத்துக்கு எழுதினார். லாகூர் சிறையில் இருந்து 1931ஆம் ஆண்டு அவர் அனுப்பிய கடிதம் அது. அதில், ‘உங்கள் நீதிமன்றத்தின் தீர்ப்பு, எங்களை போர்க்கைதிகளாக வகைப்படுத்துகிறது. ஆம், நாங்கள் போர்க் கைதிகள் தான். ஆகவே, எங்களை நீங்கள் தூக்கிலிடக்கூடாது. மாறாக, துப்பாக்கித் தோட்டாக்களால் சுட வேண்டும்’ என்று அறிவித்தான் அந்த 23 வயது இளைஞன்.*

*அடுத்து, ‘இந்தப் போர் தொடரும்’ என்று அறிவித்துவிட்டு, ‘எங்களைக் கொல்லப்போகும் ராணுவ அதிகாரிகளை எப்போது அனுப்புகிறீர்கள்’ என்ற கேள்வியோடு அந்தக் கடிதத்தை முடிக்கிறார் அவர்.*

*கடிதத்தில் ஓர் இடத்தில், குறித்துக் கொள்ளுங்கள். முதலாளித்துவம் மற்றும் ஏகாதிபத்தியத்தின் நாள்கள் எண்ணப்படுகின்றன. ஒருநாள் இங்கு, சோசியலிஸ சமுதாயம் மலரும்’ என்று கர்ஜிக்கிறான், அந்த மாவீரன்.*

*கடிதம் முழுவதுமே, அப்படித்தான். அதிகமும் தேசத்தைப் பற்றித்தான் பேசுகிறார் பகத் சிங். இதற்கு லாகூர் சிறையும் ஒன்றும் சொகுசு சிறையல்ல. ஆனாலும், பகத்சிங் அதைப் பற்றியெல்லாம் கவலை கொள்வதில்லை.*

*உதிரம் முழுவதும் விடுதலை வேட்கை ஓடும் ஒருவனின் வார்த்தைகள் எப்படியிருக்குமோ, அப்படியிருக்கின்றன பகத் சிங்கின் வார்த்தைகள்.*

*உறைவிட்டெழும் வாளென, நாண் தொட்டு புறப்படும் அம்பென பாய்கின்றன, அவன் சொற்கள்!*

*அப்படியே சாவர்க்கரின் வார்த்தைகளையும் பார்க்கவும். ‘நான் இப்படியெல்லாம் கஷ்டங்களை அனுபவிக்கிறேன்... கருணை காட்டுங்கள்... நல்ல படியாக நடந்துகொள்வேன்’ என்றெல்லாம் அந்நியனிடம் பணிகிறார் சாவர்க்கர்.*

*இவர் எப்படி பாரதத்தின் ரத்தினம் ஆவார்? ‘நீங்கள் என்னை விடுவித்தால், இந்தியாவில் உங்கள் புகழ் பெருகும்’ என்றெல்லாம்கூட ஆங்கிலேயர்களிடம் உருகியிருக்கிறார் சாவர்க்கர்.*

*1924-ல் அவரது விடுதலைக்குக் காரணமான மன்னிப்புக் கடிதம், இன்னும் உக்கிரமானது. ‘என்னை விடுவித்தால் நான் உங்களுக்கு நல்ல சேவகனாக இருப்பேன்’ என்று அதில் பட்டயமே எழுதித் தருகிறார் சாவர்க்கர்.*

*‘நான் எவ்வளவு நன்றாக நடந்து கொள்ள முடியுமோ, அவ்வளவு நன்றாக நடந்து கொள்கிறேன்...’ என்றும்கூட வாக்குறுதி அளிக்கிறார். வெளிவந்த பின், அவர் அதைத்தான் செய்தார். சிறையிலிருந்து வெளியே வந்த பிறகுதான்* ‘Hindutva : Who is a Hindu’ *புத்தகத்தையே எழுதினார்.*

*அது, இந்தியாவை பிரித்தாளத் துடித்துக் கொண்டிருந்த பிரிட்டிஷாருக்கு ஒரு கையேடாகவே உதவியது.*

*ஜின்னாவுக்கும் அது ரெஃப்ரன்ஸாக மாறியது.*

*1926இல் சாவர்க்கரைப் பற்றி ஒரு புத்தகம் வெளிவந்தது. அவரது வாழ்க்கை வரலாற்றுப் புத்தகம் அது. பெயர்,* `Life of Barrister Savarkar'. *அதை எழுதியவரின் பெயர் சித்திரகுப்தன். விநோதம் என்னவென்றால், அந்த சித்திரகுப்தனே சாவர்க்கர் தான். ஏனென்றால், அந்தச் சித்திரகுப்தன் அதற்கு முன்னரும் சரி, பின்னரும் சரி எந்தப் புத்தகமுமே எழுதவில்லை.*



*எழுதிய ஒரே புத்தகம் சாவர்க்கருடைய வரலாறு மட்டும்தான். சுய வரலாறு எல்லோரும் எழுதுவது தான். ஆனால், அதை அவர்களின் பெயரில் எழுதுவது அல்லவா உலக வழக்கம்! தனது படத்தை தானே வணங்கிய நித்யானந்தாவைப்போல, தன்னைப் பற்றி தானே புகழ்ந்து எழுதியவர் சாவர்க்கர்.*

*இதுதான் அவரது நேர்மை!*

*‘அவர் ஏன் மன்னிப்புக் கேட்டார் தெரியுமா? தேசப் பணிக்காகவே அதைச் செய்தார்’ என்கிறார்கள் சிலர். அப்படி மன்னிப்புக் கேட்டு வெளியே வந்து சாவர்க்கர் செய்த மாற்றங்கள் என்று எதுவுமில்லை. ஆங்கிலேயனை எதிர்க்கும் எந்தச் செயல்களையுமே அவர் முழு வீச்சில் செய்யவும் இல்லை.*

*மழைக்கு பயந்து எலி வளைக்குள் ஒடுங்கிக் கொள்வதைப்போல, ஒடுங்கிக் கொண்டார்.*

**கைதிகளை இஸ்லாமியர், இந்துக்கள் என்று பிரித்துப் பார்த்து வேலையைக் காட்டினார். இது, அவர் எழுதிய அந்தமான் சிறை அனுபவங்கள் புத்தகத்திலேயே பதிவாகியிருக்கிறது. ‘இஸ்லாமியர்களின் தொழுகை நேரத்தில், சங்கநாதம் எழுப்புங்கள் என்று இந்துக்களை அவர் தூண்டினார்’ என்று, அவரது ஆதரவாளர்களே பதிவு செய்திருக்கிறார்கள்.**

*ஆங்கிலேயன் இந்தியாவைவிட்டு விலகும் வரை, அவருக்கு மழைக்காலம் போகவே இல்லை.* **காந்தி வெள்ளையனே வெளியேறு இயக்கத்தை ஆரம்பித்தபோது, அதிலிருந்து விவரமாக விலகி நின்றவர் சாவர்க்கர்.** *இப்படி இன்னும் எத்தனையோ சொல்லலாம்.*

*‘காந்தி 4 வருடங்கள்தான் சிறையில் இருந்தார். ஆனால், சாவர்க்கர் 14 வருடங்கள் சிறையில் இருந்தார். அப்படியென்றால், யார் பெரிய தேசபக்தர்’ என்றும் கேட்கிறார்கள். இதில் இருக்கும் தகவல் சரி, ஆனால், பார்வை தவறு. காந்தி ஒரே முறையாக 4 வருடங்கள் சிறையில் இருக்கவில்லை. மொத்தம் பதினொரு முறை அவர் சிறைக்குச் சென்று திரும்பினார்.*

*தென்னாப்பிரிக்கச் சிறைகளும் அதில் அடக்கம். ஒன்றை நோக்கவும். ஒவ்வொரு முறையும் ஒரு போராட்டம், அதில் விசாரணை, அதற்குப் பிறகு தண்டனை என்று சிறை சென்றவர் அவர். அவர் சிறை சென்றபோதெல்லாம், மக்கள் கொதித்தெழுந்தார்கள். காந்தியை விடுவிக்கக்கோரி போராடினார்கள். அவரும் தன்பங்குக்கு சிறை சீர்திருத்தம் என்று களமிறங்கினார்.*

*ஆக, பிரிட்டிஷ் அதிகாரிகளுக்கு கண்முன்னால் இருந்த ஒரே வழி, காந்தியை விடுவிப்பது மட்டும்தான். ஒரு தடவை, நான்கு நாள்களுக்குள் மூன்றுமுறை காந்தி கைது செய்யப்பட்டு திரும்பத் திரும்ப விடுவிக்கப்பட்டிருக்கிறார்.*

*அந்தளவுக்கு ஆங்கிலேய அரசுக்கு நெருக்கடிகளை உருவாக்குபவராக இருந்திருக்கிறார் காந்தி!*

*தென்னாப்பிரிக்காவில் காந்தி சிறைத்தண்டனை முடிந்து வெளியே வந்தபோது, காந்தியை வரவேற்க ஆயிரக்கணக்கான மக்கள் வாசலில் திரண்டு நின்றார்கள் என்பது வரலாறு. அவர் பின்னால் எப்போதுமே மக்கள் இருந்தார்கள். ஏனென்றால், அவர், அவர்களின் மனங்களில் இருந்தார்.*

*75 வயதிலும்கூட சிறைக்குச் செல்லும் துணிவை, அவருக்கு அளித்தது அந்த மக்களின் அன்புதான்!*

*ஆனால், சாவர்க்கர் விவகாரம் அப்படியல்ல. அவருக்காக யாரும் இங்கே கொதித்தெழவில்லை.*

*சாவர்க்கரை விடுவிக்கக் கோரி ஒரு போராட்டம் கூட இங்கே நடக்கவில்லை. ஏன், அவரது தரப்பினரே கூட அவரை மறந்துவிட்டிருந்தார்கள்.*

*சாவர்க்கருக்கும் மக்கள் செல்வாக்குக்கும் காத தூரம். சாவர்க்கர் என்றொருவர் இருக்கிறார் என்பதையே மக்கள் அறிந்திருக்கவில்லை. அறியும் அளவுக்கு சாவர்க்கரும் மக்களுக்காக எதுவும் செய்யவில்லை. அவர் பேசியதெல்லாம் வன்முறை, வெறுப்பு, பிரிவினை மட்டும்தான். சிறைக்குள்ளேயும் அவர் அதைத்தான் செய்தார்.*

*கைதிகளை இஸ்லாமியர், இந்துக்கள் என்று பிரித்துப் பார்த்து வேலையைக் காட்டினார். இது, அவர் எழுதிய அந்தமான் சிறை அனுபவங்கள் புத்தகத்திலேயே பதிவாகியிருக்கிறது. ‘இஸ்லாமியர்களின் தொழுகை நேரத்தில், சங்கநாதம் எழுப்புங்கள் என்று இந்துக்களை அவர் தூண்டினார்’ என்று, அவரது ஆதரவாளர்களே பதிவு செய்திருக்கிறார்கள்.*

*எல்லாவற்றுக்கும் மேலே, ‘நான் நெருப்புடன் விளையாடுகிறேன் என்று எனக்குத் தெரியும். ஆனால், அதை நான் தொடர்ந்து செய்வேன்’ என்று, ஆங்கிலேயனின் நீதிமன்றத்தில் நெஞ்சம் நிமிர்த்தி அறிவித்தவர் காந்தி!*

*ஜின்னாவுக்கு முன்பே, இரண்டு தேசங்கள் கோட்பாட்டை முன்மொழிந்தவர் சாவர்க்கர்தான். நன்றாகக் கவனிக்கவும். ஜின்னாவை வழிமொழியவில்லை சாவர்க்கர். அவர்தான் முன்மொழியவே செய்கிறார்.*

*உண்மையில் 1940ஆம் ஆண்டு லாகூர் மாநாட்டில்தான், ‘இரண்டு தேசங்கள்* (Two Nations)*’ எனும் தீர்மானத்தையே போடுகிறது, முஸ்லிம் லீக். ஆனால், 1937 ஆம் ஆண்டே, ‘இரண்டு தேசங்கள்’ தீர்மானத்தை முன்மொழிந்துவிட்டது, இந்து மகா சபா. சாவர்க்கர் அப்போது அதன் தலைவர்.*

*1937 ஆம் ஆண்டின் முற்பகுதியில், அகமதாபாத்தில் நடந்த இந்து மகாசபா கூட்டத்தில் பேசிய சாவர்க்கர், ‘இங்கே இரண்டு தேசங்கள் இருக்கின்றன. ஒன்று இந்துக்களுடையது, இன்னொன்று முஸ்லிம்களுடையது’ என்று பிரகடனம் செய்தார். அந்தப் பிரகடனமே பின்னர் தீர்மானமானது.*

*அடுத்து காட்சிக்கு வருகிறார், மாதவ சதாசிவ கோல்வால்கர். சாவர்க்கரின் சிஷ்யப்பிள்ளை இவர். கோல்வால்கர் என்ன சொல்கிறார் தெரியுமா?*

*‘இந்துப் பெரும்பான்மை அடையாள அரசியலே உண்மையான தேசியவாதம். அது அல்லாத எந்த அரசியலும் இந்தியாவுக்கு விரோதமானது’ என்று இன்னொரு குண்டைத் தூக்கி வீசுகிறார்.*

*இவர்களின் இதுபோன்ற கூற்றுகளுக்குப் பிறகுதான், ஜின்னா அதிக நம்பிக்கை கொள்கிறார். ‘அவர்களே சொல்லிவிட்டார்கள். அப்புறம் என்ன?’ என்று பிரிவினைக்கத்தியை இன்னும் ஆழமாக இந்தியாவின் நெஞ்சில் ஜின்னா இறக்க ஆரம்பித்தது 1940-களுக்குப் பிறகே!*

*இன்னொரு தகவல். 1945ஆம் ஆண்டு இன்னும் எல்லையைக் கடக்கிறார் சாவர்க்கர். ‘ஜின்னாவின் இரண்டு தேசங்கள் எனும் கருத்தாக்கத்தில் எனக்கு எந்த முரண்பாடும் தெரியவில்லை. நாம் இந்துக்கள் ஒரு தேசம், முஸ்லிம்கள் இன்னொரு தேசம்’ என்கிறார்.*

*இங்கே நாம் இன்னொன்றை பார்க்க வேண்டும். இன்றுவரை பெரியாருக்கும் அண்ணாவுக்கும் ஏன் பாரத ரத்னா மறுக்கப்படுகிறது?*

*எம்.ஜி.ஆரால் அடைய முடிந்த அந்த விருதை அவரின் ஆசான்களான அவர்களால் ஏன் அடைய முடியவில்லை?*

*இதற்குக் காரணமாகச் சொல்லப்படுவது ஒரே ஒரு விஷயம்தான். அதாவது, ‘அவர்கள் பிரிவினை பேசினார்கள்’ என்பது. பெரியாரும் அண்ணாவும் பேசியது பிரிவினை என்றால், சாவர்க்கர் பேசியதற்கு பெயர் என்ன? பெரியார், அண்ணாவுக்கு ஒரு நியாயம், சாவர்க்கருக்கு ஒரு நியாயமா? ‘அதெப்படி ஒரே விஷயத்தில் இரண்டு நியாயங்கள் இருக்க முடியும்’ என்பதே நாம் எழுப்பும் கேள்வி!*

*கடைசியாக, காந்தி கொலை! காந்தி கொலையில் சிக்கியவர்கள், மொத்தம் 9 பேர். நாதுராம் கோட்சே, அவரின் சகோதரர் கோபால் கோட்சே, நாராயண் ஆப்தே, விஷ்ணு கர்கரே, மதன்லால் பஹ்வா, ஷங்கர் கிஸ்தயா, தத்தாத்ரேயா பர்சுரே மற்றும் விநாயக் தாமோதர் சாவர்க்கர். இன்னொருவர் இருக்கிறார். அவர் திகம்பர் பாட்ஜே.*

*இந்த பாட்ஜே மிகவும் முக்கியமானவர். ஏனென்றால், இவரது வாக்குமூலம்தான் கோட்சேவுக்கும் சாவர்க்கருக்கும் இருந்த தொடர்பை, தெள்ளத் தெளிவாகக் காட்டியது.*

*(தொடரும்)*

DATE OF PUBLICATION - EVERY THURSDAY TAMIL WEEKLY REG.NO.TN/CC(S)DN/459/19-21 LICENCED TO POST WPP NO.TN/PMG(CCR)/WPP-462/2019-2021
PURATCHI PERIYAR MUZHAKKAM REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPER FOR INDIA UNDER NO.TNTAM/2002/07776

# திருப்பூரில் தமிழ்ப் புத்தாண்டு – பொங்கல் விழா




திருப்பூர் மாநகர திராவிடர் விடுதலை கழகத்தின் சார்பில் 24.01.2021 அன்று தமிழ் புத்தாண்டு மற்றும் பொங்கல் விழா திருப்பூர் மாஸ்கோ நகர், பெரியார் திடலில் 12 ஆவது ஆண்டாக சிறப்பாக நடைபெற்றது. காலை முதல் இரவு வரை நடைபெற்ற இந்த விழாவில் பறை இசை நிகழ்ச்சி, விளையாட்டுப் போட்டிகள், மந்திரமா தந்திரமா அறிவியல் விளக்க நிகழ்ச்சி, சிறுவர் பாடல்கள், தமிழிசைக்கு நடனங்கள் ஆகியவை சிறப்புடன் நடைபெற்றன. அப்பகுதி வாழ் பொதுமக்கள் குழந்தைகள் பெண்கள் என ஆர்வமுடன் இந்த நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டு இரவு வரை பங்கேற்றனர்.

நிகழ்வுகள் காலை 9 மணி முதல் நிகர் பறை இசைக் குழுவின் பறை இசை நிகழ்ச்சியுடன் விழா ஆரம்பமானது. முதலில் பொதுமக்கள் அனைவருக்கும் பொங்கல் வழங்கப்பட்டது. பின்பு அதனைத் தொடர்ந்து 10.00 மணியளவில் குழந்தைகள் பெண்களுக்கான பல்வேறு விதமான விளையாட்டு போட்டிகள் துவங்கி மாலை வரை நடைபெற்றது.

மேடை நிகழ்வுகள் மாலை 6 மணி அளவில் கழக மாநகரச் செயலாளர் மாதவன் தலைமையில் துவங்கியது. நந்தினி வரவேற்புரையாற்றினார். முதல் நிகழ்வாக பெரியார் பிஞ்சுகள் யாழினி, யாழிசை, அமுதினி, பூங்குன்றன், த.பெ.தி.க.வின் தியாகு ஆகியோர் பகுத்தறிவுப் பாடல்களைப் பாடினார்கள்.

தமிழிசைப் பாடல்களுக்கு பகுதி வாழ் சிறுவர், சிறுமியர் கலந்து கொண்ட நடன நிகழ்ச்சி நடைபெற்றது. காவை.இளவரசனின் ‘மந்திரமா தந்திரமா’ அறிவியல் நிகழ்ச்சி நடைபெற்றது.

பொங்கல் புத்தாண்டு சிறப்புரையாக தமிழ்நாடு மாணவர் கழகத்தின் சந்தோஷ், திமுக பொறுப்பாளர் கதிரேசன், மதிமுக பொறுப்பாளர் வடிவேல் மற்றும் திராவிடர் விடுதலைக் கழகப் பொருளாளர் துரைசாமி, மாவட்ட தலைவர் முகில்ராசு, தமிழ்நாடு அறிவியல மன்றத் தலைவர் சிவகாமி ஆகியோர் சிறப்புரையாற்றினர்.

விளையாட்டுப் போட்டிகளில் பங்கு பெற்ற பெண்கள் குழந்தைகளுக்கு மேடையில் பரிசுகள் வழங்கப்பட்டன. இவ்விழா ஏற்பாடுகளில் தொடர்ந்து, மகாலட்சுமி, கோமதி, கணபதி, மோகன், நாகராஜ் ஆகியோர் முழுமையாகப் பங்கேற்றனர். இந்நிகழ்வில் கழகப் பொறுப்பாளர்கள் அகிலன், நீதிராஜன், வீ. தனபால், சங்கீதா, ராமசாமி, முத்து, ஐயப்பன் மற்றும் தோழர்கள் கலந்து கொண்டார்கள். கழகத் தோழர் கார்த்திகா நிறைவாக நன்றி கூறினார்.

## அறிவியலை ஏற்க மறுக்கும் மூடநம்பிக்கையாளர்கள்

நாகரிகமடையும் மனிதன், நம்பிக்கைகளுடன் அறிவியல் கற்றுத்தந்த உண்மைகளையும் சேர்த்தெடுத்துக்கொண்டே பயணிக்கிறான். இயற்கையின் இருப்புக்கு மாறாக உருவாக்கப்பட்ட கதைகள், உலகின் அனைத்து இனங்களிலும் காணப்படுகின்றன. ஆதிகாலங்களில் சூரியனும் கோள்களும் பூமியைத்தான் சுற்றுகின்றன எனும் கருத்து பரவலாக நம்பப்பட்டது. அதற்கு எதிராகப் பேசியவர்கள், ‘கடவுளின் விரோதிகள்’ என்று முத்திரை குத்தப்பட்டு, மரணத்தைத் தழுவியதும் நடந்தது.

கலீலியோ கலிலி, ‘சூரியனே மையமானது’ எனும் கருத்தைச் சொன்னபோது, ‘பூமியை ஏனைய கோள்கள் சுற்றுகின்றன’ என்று சொல்லும்படி மதபீடத்தால் வற்புறுத்தப்பட்டார். இதுபோல ‘பூமி தட்டையானது’ என்ற நம்பிக்கையும் இருந்தது. வேதப் புத்தகங்களில் பெரும்பாலானவை அதைக் குறிப்பிடுகின்றன. ஆனால், மெல்ல நாகரிகமடைந்து, அறிவியல் வளர்ச்சியின் பிறகு, பூமி கோளமானது தானென்று புரிந்து கொண்டோம். ஆனாலும், பூமி தட்டை என்பதை அடிப்படையாக வைத்து உருவான கதைகள் நம்மிடையே இப்போதும் மிச்சமிருக்கின்றன.

ஆனால், இவ்வளவு முன்னேறிய நிலையிலும், ‘பூமி தட்டையானது’ என்று ஒரு பெருங்கூட்டமே சொல்லிக் கொண்டிருக்கிறது. அவர்கள், தனிப்பட்ட எந்த மதத்தையோ, இனத்தையோ, நாட்டையோ சார்ந்தவர்களல்ல. அப்படிச் சொல்பவர்கள் அனைத்துக் கண்டங்களிலும் வாழ்கிறார்கள். அவர்கள் தங்களை `Flat Earthers’ என்று சொல்லிக்கொள்கிறார்கள்!

இவர்களின் நம்பிக்கையால் ஒரு சோகமும் நடந்தது. பூமி தட்டையானதுதான் என்பதை நிரூபிக்க 2018ஆம் ஆண்டு, சொந்தமாகச் சிறிய ரக ராக்கெட் ஒன்றைத் தயாரித்த, ‘மைக் ஹியூக்ஸ்’ (Mike Hughes) என்பவர், அதில் அமர்ந்தபடி மேலே பறந்தார். கிட்டத்தட்ட 570 மீட்டர்கள் மேலே போய் பாரசூட் மூலம் கீழே குதித்தார். ஆனால், உயரம் கம்மியாக இருந்ததால், நிலத்துடன் மோதியபடியே தரையைத் தொட்டார். நல்லவேளையாக உயிராபத்து எதுவும் ஏற்படவில்லை. அவர் மறுபடியும் 2020ஆம் ஆண்டு, பிப்ரவரி மாதம் மீண்டும் ராக்கெட்டில் பறந்து சென்றார். எல்லாமே அவரது சொந்த முயற்சிதான். ஆனால், ராக்கெட் தரையில் மோதி வெடித்ததால், மரணமடைந்தார். அப்போது அவருக்கு வயது 64. பூமி தட்டையானதா, கோளமானதா என்பதை அவர் அறிந்தாரா இல்லையா? தெரியாது!

**தகவல் : ‘ஜூ.வி.’**

# சமூக நீதிக்காக உழைத்த மாமனிதர் லாலு பிரசாத் நலம் பெற வேண்டும்!



மாட்டுத் தீவன ஊழல் வழக்கில் ஆயுள் கைதியாக இருந்து வரும் பீகார் முன்னாள் முதல்வர் லாலு பிரசாத் உடல்நிலை கவலைக்கிடமாக உள்ளது. அவர் புதுடெல்லி எய்ம்ஸ் மருத்துவ மனைக்கு சிகிச்சைக்கு கொண்டு செல்லப்படுவதாக செய்திகள் வந்திருக்கின்றன. அவர் நலம் பெற வேண்டும் என்று நாம் வாழ்த்துகிறோம்.

இந்த ஊழல் வழக்கில் லாலுவுக்கு முன்னாள் முதல்வர்களாக இருந்தவர்கள் மீதும் குற்றச்சாட்டுகள் வந்தன. ஆனால் தண்டிக்கப்பட்டவர் லாலு மட்டுமே.

மனுதர்மவாதிகளால் கடுமையாக எதிர்க்கப்படுகிற, வெறுக்கப்படுகிற அரசியல்வாதி ஒருவர் உண்டு என்று சொன்னால் அவர் லல்லு பிரசாத் என்று நாம் துணிச்சலாக கூறமுடியும்.எந்த ஒரு காலத்திலும் பாரதிய ஜனதா கட்சியுடனோ அதன் மதவாத அரசியலுடனோ சமரசம் செய்து கொண்டது இல்லை.

இந்திராகாந்தியின் அவசர நிலை கால எதிர்ப்போடு, அவரது அரசியல் தொடங்கியது. ஜெயபிரகாஷ் நாராயணன் நடத்திய முழு புரட்சி இயக்கத்தில் ஒரு மாணவராக அவர் பங்கெடுத்து அவசர நிலையை எதிர்த்து களமாடினார். அதன் காரணமாக, மிசா சட்டத்தின் கீழ் அவர் கைது செய்யப்பட்டார்.சமூகநீதிக் காவலர் விபி சிங் உருவாக்கிய மண்டல் சகாப்தத்தில் வளர்ந்து உருவான ஒரு தலைவர் லாலு பிரசாத்.

லாலு பிரசாத்தை விபி.சிங் முதலமைச்சராக்கி அவர் அரசியலில் தலைவராக வளர்வதற்கு அத்தனை உதவிகளையும் செய்தார் வி.பி.சிங். ஒருகட்டத்தில் விபி.சிங் அவர்களின் ஆட்சியை கவிழ்ப்பதற்கு பாரதிய ஜனதா கட்சி வியூகம் அமைத்து அத்வானி தலைமையில் ‘இராமன்’ ரத யாத்திரை நடத்திய போது அந்த ரதயாத்திரை நாடு முழுவதும் ரத்தக் களறியை உருவாக்கியது. அந்த ரத யாத்திரை பீகார் மாநிலத்துக்குள் நுழைந்தபோது துணிச்சலாக தடைசெய்து அத்வானியை கைது செய்தவர் லாலுபிரசாத் என்பது வரலாறு. அதன் காரணமாகவே விபி.சிங் ஆட்சிக்கு பாஜக வழங்கிய ஆதரவை விலக்கிக்கொண்டு விபி.சிங்கின் ஆட்சியும் கவிழ்க்கப்பட்டது.

மத்திய ரயில்வே அமைச்சராக லாலு இருந்தார். அவர் ரயில்வே அமைச்சராக இருந்தபோது தாக்கல் செய்யப்பட்ட நிதிநிலை அறிக்கை மக்கள் நலன் சார்ந்த அறிக்கையாகவே இருந்தது. இரயில்வே கட்டணத்தை உயர்த்தியதில்லை. இலாபம் ஈட்டும் துறையாக மாற்றினார். சரக்கு போக்குவரத்தில் நடந்த பல முறைகேடுகளை ஒழித்தார். பல வெளிநாட்டு பல்கலைக் கழகங்கள் நல்ல லாபம் தரக்கூடிய ஒரு துறையாக அவர் ரயில்வே துறையை மாற்றி அமைத்ததை வெகுவாக பாராட்டி அவருடைய நிர்வாகத் திறமையைப் பாராட்டினர். அவரை அழைத்துப் பேச வைத்தனர்.

அண்மையில் நடைபெற்ற பீகார் தேர்தலில் கூட சிறைக் கைதியாக மருத்துவ மனையில் இருந்துகொண்டே அவர் பாரதிய ஜனதா கட்சியை வீழ்த்துவதற்கு வியூகம் அமைத்து தனது கட்சியை வெற்றியின் விளிம்பிற்கு கொண்டு வந்து சேர்த்த மகத்தான மனிதராக செயல் பட்டார்.

தேர்தல் அரசியலுக்கே உரிய பலவீனங்கள் இருந்தாலும் அதை மிஞ்சக் கூடிய சமூக நீதி - எளிமை - மக்களுக்கான அரசியல் - மதவாத எதிர்ப்பில் உறுதி என்ற அடையாளங்களோடு அவர் பெருமைக்குரியவராகிறார். அவர் நலம் பெற வேண்டும் என்று காத்திருப்போம்!

“புரட்சிப் பெரியார் முழக்கம்”
ஆண்டுக்கட்டணம்
ரூ.200
தொடர்புக்கு: ஆசிரியர், 29, பத்திரிகை யாளர் குடியிருப்பு, திருவள்ளுவர் நகர், திருவான்மியூர், சென்னை-41.
✆ 7373684049
newsdvk@gmail.com

(முதல் பக்கத் தொடர்ச்சி)

திராவிடர் விடுதலைக் கழகத் தலைவர் கொளத்தூர் மணி, தன்னுடைய கடும் கண்டனத்தை பதிவு செய்ததோடு, தமிழக அரசு கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் வலியுறுத்தினார்.

இந்த கண்டன ஆர்ப்பாட்டம், மக்கள் சிவில் உரிமைக் கழகத்தின் தலைவரும், மனித உரிமைப் போராளியுமான கண. குறிஞ்சி தலைமையில், திவிக அமைப்புச் செயலாளர் இரத்தினசாமி முன்னிலையில், கனிராவுத்தர் குளம் மீட்பு இயக்க ஒருங்கிணைப்பாளர் நிலவன் தொடக்க உரையுடன் ஆரம்பமானது.

முஸ்லீம் முன்னேற்றக் கழகம், மனிதநேய மக்கள் கட்சி, விடுதலைச் சிறுத்தைகள் கட்சி, எஸ்டிபிஐ உள்ளிட்ட கட்சிகளின் நிர்வாகிகள் பங்கேற்று உரையாற்றினர்.

தமிழர் கழகம் கட்சியின் சார்பாக மாவட்டச் செயலாளர் கு. குணசேகரன், மாவட்ட அமைப்பாளர் த.விஜய், இளந்தமிழர் கழகம் மாவட்டச் செயலாளர் அரங்க.ராஜ்குமார், மாவட்ட ஒருங் கிணைப்பாளர் கு.விமல்ராஜ், க.அரவிந்த், தமிழர் கழகம் தலைவர் இரா.தமிழ்ச்செல்வன் ஆகியோர் பங்கேற்றனர். ரவி நன்றியுரையாற்றினார்.

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted: 29th January 2021

OWNER AND PUBLISHER BY : K. RAJENDRAN, FROM 29, JOURNALISTS COLONY, THIRUVALLUVAR NAGAR, THIRUVANMIYUR, CHENNAI - 600 041.
AND PRINTED BY : S. THEESMAS, AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014.
EDITOR ; K. RAJENDRAN